திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தமுடியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளதால் கூட்டுறவுத் துறையின் மூலம் சேகோ ஸ்டார்ச்-ஐ தயாரிக்கும் தொழிற் சாலையாவது ஏற்படுத்த அரசிடம் குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை,

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாக உற்பத்தி ஆகிற காரணத்தால் நவீன கிழங்கு அறவை மில் கட்டுவதற்கு அரசு மானியத்தோடு கூடிய தவணை முறை திட்டக் கடன் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(9-50 மணி)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய தனிக் கேள்வி எழுப்புவார்களேயானால் அதற்குண்டான பதில் தரப்படும்.

கல்வராயன் மலையில் சேகோ தொழிற்சாலை அமைத்தல்.

*786—திரு. செ. பெருமாள்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா;—

(அ) கல்வராயன் மலையில் சேகோ தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கல்வராயன் மலைப் பகுதியில் சாகோ தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படுகிறது. அங்கு தரமான மரவள்ளிக் கிழங்கு கிடைக்கிறது. அவை அனைத்தும் நகரத்திற்குக் கொண்டுவரப் பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகிறது. அதைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைப்பதில்லை. வாடகை அனைத்தையும் விவசாயிகளிடத்திலேதான் வசூலிக்கி றார்கள். பயிரிடுபவர்களுக்குப் பலன் கிடைப்பதில்லை. ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து கூட்டுறவு மூலமாக சாகோ பாக்டரி ஒன்றை அமைத்துத் தந்தால் நன்மையாக இருக்கும். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1990 மார்ச் 19]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் சாகோ தொழிற்சாலைத் தொடங்கவேண்டும் என்றால் 1 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டர் தண்ணீர் அந்தத் தொழிற் சாலைக்குத் தேவைப்படுகிறது. கல்வராயன் மலைப்பகுதி வடகிழக்கு மற்றும் தென்கிழக்கு பருவக் காற்றால் மழை பெறு கின்ற பகுதி. மேலும், அங்கே ஏரியோ, ஆற்றுப் பாசனமோ கிடையாது. எனவேதான் தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே அமைக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. கீழ் மட்டத்தில் சில இடங்களில் ஓரளவிற்குத் தண்ணீர் கிடைக்கிறதா என்பதற்கு நிலத்தடி நீர் ஆய்வு நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையை வைத்துத் தான் அந்தப் பகுதியில் சிறிய அளவிலாவது சாகோ ஸ்டார்ச் தொழிற்சாலை அமைக்க இயலுமா என்பதை அரசு பின்னர் பரிசீலிக்கும்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் சாகோ பாக்டரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும், கரியக்கல் டேம் என்று பாப்பநாயக்கன் பட்டியில் தற்போது கட்டிக்கொண் டிருக்கிறார்கள். அங்கே தண்ணீர் வசதி இருக்கிறது. அரசு மீண்டும் பரிசீலனை செய்து அந்த இடத்திலாவது கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிச்சயம் பரிசீலனை செய்யும்.

சீர்காழியில் புதிதாக ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி கட்டுதல்,

* 2240—டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழியில் புதிதாக ஆதி திராவிடர் மாணவர்கள் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம் சீர்காழியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

டாக்டர் மா. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சீர்காழியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி